செ.வெ.எண்.47 நாள்.17.11.2017.

திருநெல்வேலி மாவட்டத்தில் 64வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள், 220 பயனாளிகளுக்கு ரூ.2.33 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

-------

திருநெல்வேலி கொக்கிரகுளம் ரோஸ் மஹாலில் 64வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17.11.2017) நடைபெற்றது. இவ்விழாவில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு, சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள், 220 பயனாளிகளுக்கு ரூ.2.33 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலேயே, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் உள்ள அம்மா மருந்தகம் சிறந்த மருந்தகமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அம்மா மருந்தகத்தில் தனியார் விற்பனை மருந்தகத்தினை விட 15 சதவீதம் கூடுதலாக மக்களுக்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2016–2017ம் ஆண்டிற்கு ரூ.173 கோடி பயிர் கடன் வழங்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, 9063 விவசாயிகளுக்கு ரூ.85.28 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 2017–2018ம் ஆண்டிற்கு ரூ.200 கோடி பயிர் கடன் வழங்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு, 31.10.2017 வரை 9965 விவசாயிகளுக்கு ரூ.77.88 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் கிளைகள் மூலமாக 64 நபர்களுக்கு ரூ.60.88 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு நகர வங்கிகள் மூலம் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 11 நபர்களுக்கு ரூ.2.78 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடப்பாண்டில் இதுவரை 439 குழுக்களுக்கு ரூ.10.74 கோடியும், நகர கூட்டுறவு வங்கிகள் மூலம் 206 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.49.40 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையேற்று பேசியதாவது–

கூட்டுறவு என்பது 150 வருடத்திற்கு முன்பே தோன்றி, சிறப்பாக நடைபெற்று வருகிறது. கூட்டுறவில் சிறப்பாக செயல்பட்டு பல குழுக்கள் இந்திய அளவில் இடம் பிடித்துள்ளது. அமுல் நிறுவனம் முதலில் கூட்டுறவாக ஆரம்பித்து, தற்போது இந்தியா முழுவதும் பிரபல நிறுவனமாக உருவாகியுள்ளது. அனைவரும் கூட்டுறவில் இணைந்து செயல்பட வேண்டும். விவசாயிகளுக்கு பயிர் கடனுதவிகள் வழங்குவதில் கூட்டுறவு சங்கங்கள் முன்னிலையில் உள்ளது. மேலும், கூட்டுறவு சங்கங்களின் மூலம் வேலை செய்யும் 121 பெண்களுக்கு ரூ.1.51 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. 21ம் நூற்றாண்டில் கூட்டுறவு சங்கங்கள் நவீன மயமாக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு சங்கங்கள் மூலம் அனைத்து விதமான சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. மேலும், கூட்டுறவு சங்கங்கள் மூலம் அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. பொதுமக்கள், விவசாயிகள் அனைவரும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தங்களுக்கு தேவையான கடனுதவிகளை பெற்று, கூட்டுறவு சங்கங்களை மென்மேலும் வளர்ச்சியடைய செய்திட வேண்டுமென தெரிவித்தார்.

இவ்விழாவில், அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.முருகையாபாண்டியன், இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ்.இன்பதுரை, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் திரு.குருமூர்த்தி, துணைப்பதிவாளர் திரு.பத்மநாபன், திருநெல்வேலி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.ஆ.வெங்கடேசன், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய துணைத் தலைவர் திரு.ந.கணேசராஜா, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய துணைத் தலைவர் திரு.திரு.கா.கண்ணன்(எ) இராஜூ, தமிழ்நாடு சிறுபான்மையினர் கல்வி மானியக்குழு உறுப்பினர் திரு.காபிரியேல் ராஜன், திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு வேளாண்மை பொறியியல் சேவை மைய தலைவர் திரு.ந.மகபூப்ஜான், நெல்லை கூட்டுறவு பேரங்காடி தலைவர் பல்லிக்கோட்டை திரு.ஏ.செல்லத்துரை, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட நெசவாளர் கூட்டுறவு இணைய தலைவர் திரு.வே.ஆறுமுகம், திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய தலைவர் திரு.எஸ்.ரமேஷ், பாளையங்கோட்டை நகர கூட்டுறவு வங்கி தலைவர் (பொறுப்பு) திரு.சுதா கே.பரமசிவன், திரு.பரணி சங்கரலிங்கம், ரெட்டியார்பட்டி நாராயணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.சுப்பையாபாண்டியன், திரு.ஹையாத், கூட்டுறவுத்துறை துணைப்பதிவாளர்கள் திரு.ந.கனகசுந்தரி, திருமதி.பா.வளர்மதி, திரு.பா.இராஜன், (டான்பெட்) திருமதி.சி.பெரியநாயகிபுஷ்பம் உள்பட முக்கிய பிரமுகர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.